# தகவல் பாலம்

## தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

## OUR LADY OF GOOD HEALTH PARISH

**Volume 1, Issue 12** **May 2020**

### *PASTORAL STAFF:*

**Fr. Charles W. Collins**
*Pastor*

Maureen Rajadurai
*Parish Secretary*

### *ONLINE MASS SCHEDULE & SITES:*

**Sunday:** **12:30 pm**
**Tuesday** **7:00 pm**
**Saturday:** **7:00 pm**

**https://www.olghtamilparish.com/**
**https://www.facebook.com/OLGHTamilParish**
**https://www.youtube.com/user/olghtamilparish/videos**

### *OFFICE HOURS:*

**Due to COVID 19, our Parish Office is CLOSED to the public**

### *OUR LADY OF GOOD HEALTH PARISH*

**131 Birchmount Road,**
**Scarborough, ON M1N 3J7**
***(Birchmount & Danforth Ave.)***

**Phone:** **416-264-OLGH (6544)**
**Fax:** **416-264-6545**
**Email:** **office@olghtamilparish.com**
**Website:** **www.olghtamilparish.com**

### ஞாயிறு திருப்பலி

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்** ரொறன்ரோ நேரம் **மதியம் 12:30 மணிக்கு** திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

---

### தூய கன்னிமரியாளின் வணக்க மாதம்

சிறப்பாக நம் அன்னையை புகழவும் வாழ்த்தவும் இந்த மாதம் நமக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

வைகாசி மாத்தில் **ஒவ்வொரு சனிக்கிழமையும்** ரொறன்ரோ நேரம் **மாலை 7:00 மணிக்கு திருச்செபமாலையும் நற்கருணை ஆசீரும்** ஒளிபரப்பாகும்.

இம் மாதம் முழுவதும் தினமும் உங்களுக்கு வசதியான நேரத்தில் வீட்டலிருப்பவர்கள் அனைவரும் ஒன்றுகூடி செபமாலை சொல்லலவும், மரியாளின் அடைக்கலத்தை இரந்து மன்றாடவும் அன்னை மரியாளின் வணக்க மாதத்தை தகுந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளவும் உங்களனைவரையும் அழைக்கின்றோம்.

***“கூடிச் செபிக்கின்ற குடும்பம் ஒருபோதும் குலைந்து போகாது. அன்னையின் பிள்ளைகள் என்றும் அழிவதில்லை”***

---

### தூய அந்தோனியார் நவநாள் வழிபாடும் திருப்பலியும்

தூய அந்தோனியார் திருவிழாவுக்கு ஆயத்தமாக **ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும்** ரொறன்ரோ நேரம் **மாலை 7:00 மணிக்கு** நவநாள் வழிபாடும் திருப்பலியும் ஒளிபரப்பாகும்.

---

### திருமண அருட்சாதனம்

திருமண அருட்சானத்திற்கான முன்பதிவுகளைச் செய்தவர்கள் தயவுசெய்து பங்குத்தந்தையை காலம் தாமதிக்காமல் தொடர்பு கொள்ளவும்.

**இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் பல சவால்களுக்கு மத்தியிலும் எம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்கி, எம் மக்கள், ஆன்மீக வாழ்வில் ஒரே குடும்பமாக நிலைத்திருக்க ஆவன செய்கின்றோம். உங்களது மனமுவந்த அனைத்துப் பங்களிப்புகளுக்கும் எமது நன்றிகள்**

## எமது பங்குத்தந்தையின் உள்ளத்திலிருந்து



கிறிஸ்து இயேசுவில் அன்பான சகோதர, சகோதரிகளே, இளையோரே என் அன்பான சிறுவர்களே,

நான் உங்களோடு சேர்ந்து செபிக்கும் சங்கீதம் 91 இனை ஞாபகப்படுத்துகிறேன். அதை ஒவ்வொரு நாளும் என்னோடு சேர்ந்து செபிக்கவும் அழைக்கின்றேன். இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் பல இன்னல்களோடு உங்கள் இல்லங்களில் வாழந்து வருகின்ற இவ்வேளையில் நீங்கள் அனைவரும் உடல் ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியாகவும் ஆன்மீத்தில் ஒரே குடும்பமாக நிலைத்திருக்கவும் எல்லாம் வல்ல இறைவனிடம் இறைஞ்சி என்னுடைய நாளந்த செபங்களில் உங்களனைவரையும் நினைந்து மன்றாடுகின்றேன். எனக்காகவும் சக குருக்களுக்காகவும் எமது பணிக்காகவும் உங்கள் செபங்களில் மன்றாடுங்கள்.

*1 உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர், எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர்.*
*2 ஆண்டவரை நோக்கி, "நீரே என் புகலிடம் என் அரண் நான் நம்பியிருக்கும் இறைவன்" என்று உரைப்பார்.*
*3 ஏனெனில், ஆண்டவர் உம்மை வேடரின் கண்ணியினின்றும் கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார்.*
*4 அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார் அவர்தம் இறக்கைகளின்கீழ் நீர் புகலிடம் காண்பீர் அவரது உண்மையே கேடயமும் கவசமும் ஆகும்.*
*5 இரவின் திகிலுக்கும் பகலில் பாய்ந்துவரும் அம்புக்கும் நீர் அஞ்சமாட்டீர்.*
*6 இருளில் உலவும் கொள்ளை நோய்க்கும் நண்பகலில் தாக்கும் கொடிய வாதைக்கும் நீர் அஞ்சமாட்டீர்.*
*7 உம் பக்கம் ஆயிரம்போர் வீழ்ந்தாலும், உம் வலப்புறம் பதினாயிரம் பேர் தாக்கினாலும், எதுவும் உம்மை அணுகாது.*
*8 பொல்லார்க்குக் கிடைக்கும் தண்டனையை நீரே பார்ப்பீர் உம் கண்ணாலேயே நீர் காண்பீர்.*
*9 ஆண்டவரை உம் புகலிடமாய்க் கொண்டீர் உன்னதரை உம் உறைவிடமாக்கிக் கொண்டீர்.*
*10 ஆகவே, தீங்கு உமக்கு நேரிடாது வாதை உம் கூடாரத்தை நெருங்காது.*
*11 நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி, தம் தூதர்க்கு அவர் கட்டளையிடுவார்.*
*12 உம் கால் கல்லின்மேல் மோதாதபடி, அவர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக்கொள்வர்.*
*13 சிங்கத்தின்மீதும் பாம்பின்மீதும் நீர் நடந்து செல்வீர் இளஞ்சிங்கத்தின்மீதும் விரியன்பாம்பின்மீதும் நீர் மிதித்துச் செல்வீர்.*
*14 'அவர்கள் என்மீது அன்புகூர்ந்ததால், அவர்களை விடுவிப்பேன் அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால், அவர்களைப் பாதுகாப்பேன்*
*15 அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது, அவர்களுக்குப் பதிலளிப்பேன் அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன் அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன்*
*16 நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன் என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்.*

ஆலயத்தில் நடைபெறும் வழிபாடுகளில் நேரடியாகக் கலந்துகொள்ள முடியாத இக்காலப் பகுதியில், இலத்திரனியல் ஊடகங்களூடாக நாம் ஒளிபரப்பும் வழிபாடுகளில் நீங்கள் தொடர்ந்து விருப்போடு கலந்துகொள்வதையிட்டு நான் பெருமகிழ்ச்சியுடன் நன்றி கூறுகிறேன். உங்களது பங்கேற்பும் ஆதரவும், நாம் தொடர்ந்தும் எமது வழிபாடுகளை நேரலையாக உங்களுக்கு எடுத்துவருவதற்கான ஊக்கத்தையும் கடப்பாட்டையும் தருகிறது. மேலும், இத்தகைய ஒளிபரப்பிற்கு நீங்கள் தாராள மனத்துடன் உதவி வருவதையும் நான் மிகுந்த மனநிறைவுடன் நன்றிகூறி வரவேற்கிறேன். விரைவில் நாம் மீண்டும் எமது ஆலயத்தில் நேரடியாகச் சந்திப்பதற்கு இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென்று தினமும் எமது செபத்தில் மன்றாடுகிறோம்.

**சாள்ஸ் கொலின்ஸ்**
*பங்குத்தந்தை*
*தூய ஆரோக்கிய அன்னைத் தமிழ்ப் பங்கு*

## திருப்பலிகளும் திருவழிபாட்டு நிகழ்வுகள்

இக்காலத்தில் திருப்பலிகள், வழிபாடுகளை மிகச்சிறப்பாக எமது பங்கிலிருந்து நேரலையாக ஒளிபரப்பு செய்வதற்கு பலர் எமக்கு பல்வேறு வழிகளில் உதவிசெய்து வருகின்றார்கள். முக்கியமாக இவ்வழிபாடுகளை சிறப்புற நடாத்த சென்னையிலிருந்து வருகைதந்திருக்கின்ற அருட்தந்தை அ. கிறிஸ்டோபர் அவர்களுக்கும் அருட்தந்தை பீற்றர் ஜிற்ரேந்திரன், அருட்சகோதரர் மார்ட்டீன் அவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள். மேலும் எமது பங்கில் தமது பாதுகாவலர்களின் திருவிழா திருப்பலிகளை ஒழுங்கு செய்பவர்கள் தாமாகவே முன்வந்து தம்மாலான நிதிப்பங்களிப்பினை வழங்கியிருந்தார்கள். குறிப்பாக தவக்கால வழிபாடுகள், இறையிரக்கப் பெருவிழா, தூய சூசையப்பர் திருவிழா, தூய ஜோசப் வாஸ் திருவிழா, தூய பாத்திமா திருவிழா போன்றவற்கும் தமது பங்களிப்பினை வழங்கியிருந்தார்கள். சிலர் தனிப்பட்ட முறையிலும் குடும்பங்களாகவும் அன்பளிப்புக்களை வழங்கியிருந்தார்கள். அனைவருக்கும் எமது நன்றிகளும் வாழ்த்துக்களும். எமது செபங்களில் உங்களுக்காகவும் இறைவனிடம் மன்றாடுகின்றோம்

# தூய அந்தோனியார் நவநாள் (ST. ANTHONY NOVENA)

| திகதி | நவநாள் திருப்பலி | அன்பளிப்பு வழங்கிய குடும்பங்கள் |
|---|---|---|
| **TUESDAY APRIL 28** | **தூய அந்தோனியார் 3வது நவநாள்**<br>**மாலை 7:00 மணி**<br>சத்தியமறை நெறியின்படியே, வழுவாமல் நடந்து உலக சார்ந்த விருப்பத்தையும், சிற்றின்ப ஆசைகளையும் வெறுத்துச் சந்நியாச உடை உடுத்தி, உலகத்தில் அநேக அற்புதங்களைச் செய்துகொண்டுவந்த தூய அந்தோனியாரே, நாங்கள் உலக மகிமைகளையும் துரோகம் உட்பட்ட துர்க்குணத்தையும் விட்டுத் திருச்சபைப் படிப்பினைகளின்படியே நடந்து, கடவுளுக்கு ஏற்புடையவர்களாயிருக்கக் கிருபை கூர்ந்தருள வேண்டுமென்று உம்மிடம் வேண்டுகிறோம். (1.பர. 1 அருள்,1 திரி) | Anton Mariaarumainayagam<br>Arsirvatham Johnson<br>Arulrajah Samson<br>Chelliah Jeva<br>Gnanam Sahayanathan<br>Gnanapiragasam Jesunesan<br>Joseph Chelliah<br>Moris Thasisius<br>Richmond Joseph<br>Singarajah Reginold<br>Thampimuthu Roche<br>Vanmathy Shanmuganathan |
| **TUESDAY MAY 05** | **தூய அந்தோனியார் 4வது நவநாள்**<br>**மாலை 7:00 மணி**<br>இறைவனின் திருமறையின் நெறிப்படியே நடந்து விரத்தத்துவத்தில் உறுதிப்பட்டு, தவத்தையும், தருமத்தையும் கைக்கொண்ட தூய அந்தோனியாரே, உலகத்தில் எங்களை நல்ல மனதோடு தியாகமும் பகிர்வும் நிறைவாகக் கொண்டிருக்கிற விசுவாசிகளாக வாழக் கிருபை செய்தருள வேண்டுமென்று உம்மிடம் வேண்டுகிறோம். (1.பர. 1 அருள்,1 திரி) | Angelo Swampillai<br>Anton Anthonimuthu<br>Anton Robert Paul Tharsini<br>Antony Emmanuel Irine<br>Britto Swampilai<br>Jesurajah Jayaseelan<br>Lio Swampillai<br>Michale Daniyelle Vethananthan<br>Nirmala Kamalakaran<br>Pasupathy Sivasubramaniam<br>Rajan Swampillai<br>Rajani Dominic<br>Sivasubramaniam Dineshkumar<br>Sivasubramaniam Sutharsan |
| **TUESDAY MAY 12** | **தூய அந்தோனியார் 5வது நவநாள்**<br>**மாலை 7:00 மணி**<br>இஸ்பானிய நாட்டின் நவ நட்சேத்திர ஒளியும், வெகு அற்புதமுள்ளவருமாயிருக்கிற தூய அந்தோனியாரே, திருச்சபையில் இருக்கிற நாங்கள், எங்கள் மரணவேளையிலே நல்ல மனதோடு ஆன்மசோதனை செய்து இறையருளை அடையவும், எங்கள் ஆத்துமத்தில் தூய ஆவியானவர் நட்சேத்திர ஒளிபோல் இறங்கி எங்களைப் பரலோகத்துக்குக் கூட்டிச்செல்லும்படியும் செய்யவும் கிருபை செய்தருள வேண்டுமென்று உம்மிடம் வேண்டுகிறோம்..(1.பர. 1 அருள்,1 திரி நவநாள் செபம்.) | Anthony Gunam<br>Fatima Kathiramalairajah<br>Gaaneswary Ariyaratnam<br>Hilda Godfree<br>Lourdson Anthonipillai<br>Mahendiran Anthonipillai<br>Maria & Jerard Benedict<br>Marina & Berchmans Gunanathan<br>Michele Sinnappu<br>Rajani Jeyaseelan<br>Selvarajh Celestian<br>Shanthy Anton<br>Suresh Anthonipillai<br>Yogeswary Suresh Kumar |

**கோடி அற்புதரான பதுவை தூய அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**

# தூய அந்தோனியார் நவநாள் (ST. ANTHONY NOVENA)

| திகதி | நவநாள் திருப்பலி | அன்பளிப்பு வழங்கிய குடும்பங்கள் |
|---|---|---|
| **TUESDAY<br>MAY 19** | **தூய அந்தோனியார் 6வது நவநாள்**<br>**மாலை 7:00 மணி**<br><br>சத்திய வேதபாரகருக்கும், மறைநூல் அறிஞர்களுக்கும், நிர்ணயித்த மறைநெறியின்படி திருமறையை நிறைவேற்றி திருச்சபையை ஆதரவோடு அரவணைத்துக் கொண்டு வருகிற தூய அந்தோனியாரே, நாங்கள் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்களின் மறைபோதனைகளுக்கும், திருச்சபையினுடைய படிப்பினைகளுக்கும் கீழ்ப்படிந்து, நித்திய மோட்சபாக்கியத்தை அடையும்படி கிருபை செய்தருள வேண்டுமென்று உம்மிடம் வேண்டுகிறோம். (1.பர. 1 அருள்,1 திரி) | Alfred Jeyaratnam<br>Anonymous ( His B'Day)<br>Josephrajah Baptist<br>Marceline Mariayannnayagam<br>Mary Anthonipillai Mary Agnes<br>Nirmala Kamalakannan<br>Philip Joseph Kovy Malar<br>Rasanayagam Thiruvalagan<br>Tiruchelvam Family<br>William Duraisamy<br>Wimalrajah Sebamalai |
| **TUESDAY<br>MAY 26** | **தூய அந்தோனியார் 7வது நவநாள்**<br>**மாலை 7:00 மணி**<br><br>இறைவனுடைய கற்பனைகளுக்கும், அவருடைய திருச்சபைக்கும் கீழ்படிந்து நடவாமல், தேவதுரோகத்திலேயும், பாவத்திலேயும் சுழன்று திரியும் அவவிசுவாசிகளுக்கு, மகா தீவிரத்துடனே போதித்து, அவர்களை மனமாற்றி மெய்ஞ்ஞான வழியைத் தேடும்படி செய்வித்த தூய அந்தோனியாரே, நாங்களும், எங்கள் பிள்ளைகள் சகோதரர்களும் நடக்கிற பிழையான பாதையை விட்டு, நீர் எங்களுக்குப் படிப்பிக்கிற நல்வழியில் நடக்கத்தக்கதாகக் கிருபை செய்தருள வேண்டுமென்று உம்மிடம் வேண்டுகிறோம். (1.பர. 1 அருள்,1 திரி) | Agnes Paul<br>Anonymous<br>Anton Philip Ganapiragasam<br>Antony - Ruuth, Cassie, Mary, Nicolla<br>Arulappu Jeganathan<br>Celestina Savirimuthu<br>Cynthiya Arasaratnam<br>Elias Arulanantham<br>Francis Pirakasam<br>Jerrad Nelciya<br>Jesuthasan Evangeline<br>Jesuthasan Marian<br>Joseph Marianayagam<br>Manuel Theresammah<br>Robert Stanislaus<br>Sanjukumar Mithula<br>Stanislus<br>Sunderakumar Viji |




**தொடர்ச்சியான அன்பளிப்புகளுக்கு நன்றிகள்**

தற்போதைய சவாலான காலப்பகுதியிலும், தொடர்ந்து எமது ஆலயத்தின் வளர்ச்சிக்காக, முன் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு முறை மூலம் நீங்கள் வழங்கி வருகின்ற நிதிப் பங்களிப்பிற்கு எமது மனம்நிறைந்த நன்றியும் இறை ஆசீரும் உரித்தாகட்டும்.

**மேலதிக விபரங்களுக்கு எமது பங்குத்தந்தையை தொடர்பு கொள்ளவும்.**




**முள்ளிவாய்க்கால் நினைவு நாள் திருப்பலி - வைகாசி 18ம் திகதி (ஆயுலு 18)**

ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இறந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர், அநாதரவாக கைவிடப்பட்டோர், ஊனமுற்றோர் அனைவரையும் நினைவு கூர்ந்து இறைவனின் இரக்கத்தை வேண்டி ரொறன்ரோ நேரம் மாலை 7:00 மணிக்கு விசேட நினைவு நாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.